GoLAAH TRAVELS
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்

அகர முதல
Aagaramuthalaa
மின்னிதழ்
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், செப்டம்பர் 21,2021
மலர்:09 இதழ்:10

# தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி பதவியேற்பு

## கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்; ஈடில்லா உயிர்களை மாய்த்துக் கொள்ளாதீர்கள்-முதல்வர்

## இதுவரை தமிழ்நாட்டில் 4.12 கோடி பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது–ஜெ.ராதாகிருஷ்ணன்



தமிழ்நாடு ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோஹித், பஞ்சாப் மாநிலத்துக்கு கடந்த வாரம் மாற்றப்பட்டார். இதனையடுத்து தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக நாகாலாந்த் ஆளுநராக இருந்த ஆர். என். ரவி நியமிக்கப்பட்டார். பீகார் மாநிலத்தைச் சேர்ந்த முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியான ஆர். என். ரவியின் முழு பெயர் ரவீந்திர நாராயண ரவி 1976 ஆம் ஆண்டு ஐபிஎஸ் அதிகாரியாக பொறுப்பேற்ற ஆர் . என். ரவியின் பூர்வீகம் கேரளா என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், 18.09.2021 காலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாட்டின் 26 வது ஆளுநராக ஆர். என். ரவி பொறுப்பேற்றார். இவருக்கு சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். இந்த விழாவில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், மூத்த அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, எ . வ. வேலு, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். காங்கிரஸ் கட்சி இவ்விழாவைப் புறக்கணித்துள்ளது.

# ஜிஎஸ்டிக்குள் பெட்ரோல், டீசல் வராது

## மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்பு



உத்தரப்பிரதேசம் மாநிலம், லக்னோவில் 17.09.2021 காலை 11.00 மணிக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் 45 வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாநில நிதியமைச்சர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டி—க்குள் கொண்டு வருவது, பல்வேறு பொருட்களுக்கான ஜிஎஸ்டி வரி குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், "பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டிக்குள் கொண்டு வருவதைத் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் எதிர்த்தன. நிதி நெருக்கடியைச் சந்தித்ததால் பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டி—க்குள் கொண்டு வர மாநிலங்கள் எதிர்த்தன. பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டி—க்குள் கொண்டு வந்தால் மாநிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் எனக் கூறினர்.
கரோனா சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் சில முக்கிய மருந்துகள், கருவிகளுக்கான ஜிஎஸ்டி வரிச் சலுகை டிசம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 11 வகை கரோனா மருந்துகளுக்கான வரிச் சலுகையை டிசம்பர் மாதம் 31 — ஆம் தேதி வரை நீட்டிப்பது பற்றி முடிவெடுக்கப்பட்டது. ரூபாய் 16 கோடி மதிப்புள்ள உயிர் காக்கும் மருந்துகளுக்கு ஜிஎஸ்டியில் விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது " எனத் தெரிவித்தார். தமிழ்நாட்டின் கடும் எதிர்ப்பால் தேங்காய் எண்ணெய்க்கு இரண்டு விதமான வரி விதிக்கும் முயற்சியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதிக்குப் பின் காணொளியில் ஜிஎஸ்டி கூட்டம் நடைபெற்று வந்த நிலையில், 20 மாதங்களுக்குப் பிறகு 17.09.2021 நேரடியாக நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தனது அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள காணொளியில், "எல்லோருக்கும் வணக்கம்! கடந்த2017 — ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாணவி அனிதா இறந்த போது என்ன மனநிலையில் இருந்தேனோ அதே மனநிலையில்தான் இப்போதும் இருக்கிறேன். சனிக்கிழமை சேலத்தைச் சேர்ந்த மாணவன் தனுஷ் தற்கொலை செய்து கொண்ட போதே, இனி இப்படியொரு துயரம் நடக்கக் கூடாது என்று மாணவச் செல்வங்களைக் கேட்டுக் கொண்டேன். ஆனால், அரியலூர் மாவட்டத்தில் கனிமொழி என்ற மாணவியும், வேலூர் மாவட்டத்தில் சவுந்தர்யா என்ற மாணவியும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் நான் சுக்குநூறாக உடைந்துவிட்டேன். இப்போது எனக்கு இருக்கும் வேதனையைவிட, இனி இப்படியொரு துயரம் நடக்கக் கூடாது என்ற கவலைதான் அதிகமாக இருக்கிறது. அந்த அக்கறையோடுதான் உங்களிடம் பேசுகிறேன்.

பல தலைமுறைகளாக மறுக்கப்பட்டு வந்த கல்விக் கதவை, இழுத்து மூடும் செயல்தான் நீட் தேர்வு. ஏழை, எளிய மாணவர்களுடைய கல்விக் கனவை நாசமாக்கக் கூடியது என்று தான், தி. மு . க. இந்த அநீதி தேர்வுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களை நடத்தியது. அதற்கு முன்னாள் நாம் பொறுப்பில் இருந்த போதும் இந்த தேர்வை நடத்தவிடவில்லை. ஆனாலும், சிலர் தங்களுடைய சுயலாபத்துக்காக, இந்த தேர்வைத் தமிழ்நாட்டுக்குள் அனுமதித்தார்கள். சிலர் இப்போதும் இந்த அநீதி தொடர வேண்டும் என்று பல பொய்யான பரப்புரைகள் செய்கிறார்கள். மருத்துவம் படிக்க வேண்டும், டாக்டர் ஆக வேண்டும் என்ற லட்சியத்துடன் இருப்பவர்களின் கனவைச் சிதைக்கக் கூடியதாக நீட் தேர்வு முறை இருக்கிறது. ஆனால் ஒன்றிய அரசு, இதில் இருந்து விலக்களிக்க இன்னும் இறங்கி வராமல் கல்நெஞ்சோடு இருக்கிறது. கடந்த மே மாதம் ஆட்சிப் பொறுப்பேற்ற தி. மு. க . அரசு, நீட் தேர்வு குறித்து விசாரிக்க ஒரு ஆணையத்தை அமைத்தது. அந்த ஆணையத்திடம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஒரு சிலரைத் தவிர எல்லோருமே நீட் தேர்வை எதிர்த்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நீட் தேர்வு வேண்டாம் என்று அந்த ஆணையமும் அறிக்கை அளித்தது. அதை அடிப்படையாக வைத்து, நீட் தேர்வை ரத்து செய்வதற்கான தனி மசோதாவை , தமிழ்நாடு சட்டமன்றத்தில் நான் தாக்கல் செய்தேன். அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாக இதனை நிறைவேற்றி இருக்கிறோம். 12 — ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த கருத்தை, பல்வேறு மாநில அரசுகளின் கவனத்திற்கும் கொண்டு செல்ல இருக்கிறோம். இறுதியாக நீட் தேர்வை ரத்து செய்யும் நிலையை நிச்சயம் ஏற்படுத்துவோம். இந்தச் சூழலில் மருத்துவம் படிக்க முடியவில்லை, நீட் தேர்வில் வெற்றி பெற முடியவில்லையே என்ற ஏக்கம் காரணமாக உயிரை மாய்த்துக் கொள்ளும் செய்தி என் நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சுவதாக இருக்கிறது . உங்களுடைய உயிர், விலை மதிப்பு இல்லாதது. உங்கள் உயிர், உங்கள் குடும்பத்துக்கு மட்டுமல்ல இந்த நாட்டுக்கும் முக்கியமானது. உங்களுடைய எதிர்காலத்தில்தான் இந்த நாட்டின் எதிர்காலம் அடங்கி இருக்கிறது. அத்தகைய மதிப்பு வாய்ந்த உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டாம் என்று மன்றாடிக் கேட்கிறேன். உங்களால் மருத்துவர்கள் ஆக முடியும். உங்களால் நினைத்ததை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் காட்ட முடியும். உங்களால் முடியாதது எதுவுமில்லை. அந்த தன்னம்பிக்கையோடு நீங்கள் அனைவரும் படிக்க வேண்டும். உங்கள் உயிரை மாய்த்து, உங்கள் பெற்றோருக்கு வாழ்க்கை முழுவதும் துன்பத்தை ஏற்படுத்தாதீர்கள். கல்வியில் மட்டுமல்ல, தன்னம்பிக்கையிலும் தலைசிறந்த மனிதர்களாக வளர வேண்டும். பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகளைக் கல்வியில் மட்டுமின்றி , தன்னம்பிக்கையும் கொண்ட மனிதர்களாக வளர்க்க வேண்டும். இதுதான் விதி என்று எதுவுமில்லை. விதியை மதியால் வெல்ல முடியும். முயற்சிதான் வெற்றியைத் தரும் என்றார் திருவள்ளுவர். அத்தகைய துணிச்சலும், விடா முயற்சியும், தன்னம்பிக்கையும் கொண்டவர்களாக , நமது மாணவ, மாணவிகள் வளர வேண்டும், வாழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகள் சொல்வதற்காக அரசு சார்பில் 104 என்ற தொலைப்பேசி எண்ணை உருவாக்கிக் கொடுத்துள்ளோம். மாணவ, மாணவியருக்கு ஆலோசனை சொல்வதற்காக மனநல மருத்துவர்கள் எப்போதும் தயாராக இருப்பார்கள். உடல் நலன், உள்ள நலன் கொண்டவர்களாக நமது மாணவச் செல்வங்களை வளர்த்தெடுக்க வேண்டும். பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறிய அழுத்தங்கள் தர வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் , சமூக சேவை செய்வோர், திரைத்துறையினர் ஆகியோர் மாணவச் செல்வங்களுக்குத் தன்னம்பிக்கை விதை விதைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து, மாணவச் செல்வங்கள் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டாம் என்று மீண்டும் மீண்டும் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். " இவ்வாறு முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

# நீட் தேர்வு குறித்த நீதிபதி ஏ.கே.ராஜன் குழு சமர்ப்பித்த அறிக்கை வெளியீடு.!





தமிழ்நாட்டில் நீட் தேர்வால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து ஆய்வுசெய்து அறிக்கை அளிக்க நீதிபதி ஏ. கே. ராஜன் தலைமையிலான குழுவைத் தமிழ்நாடு அரசு கடந்த ஜூன் மாதம் 10 ஆம் தேதி அமைத்திருந்தது. நீட் தேர்வால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம் என இக்குழு அறிவித்து அதற்கான ஆய்வுகளை மேற்கொண்டது. நீட் தேர்வினால் ஏற்பட்ட பாதிப்புகளை ஆராய்ந்த நீதிபதி ஏ . கே. ராஜன் தலைமையிலான குழு கடந்த ஜூலை 14 ஆம் தேதி தமிழ்நாடு முதல்வர் மு. க. ஸ்டாலினைச் சந்தித்து இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின்படி 165 பக்கங்கள் கொண்ட ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தது. இந்த சந்திப்பிற்குப் பின் செய்தியாளர்களைச் சந்தித்த ஏ. கே. ராஜன், நீட் தேர்வுக்கு ஆதரவாகவும் எதிராகவும் மொத்தம் 86,342 பேர் கருத்து தெரிவித்துள்ளனர். பெரும்பாலானோர் நீட் வேண்டாம் என்றே கருத்து தெரிவித்துள்ளனர். மற்றபடி ஆய்வு தொடர்பான தகவல்களை நாங்கள் சொல்லக்கூடாது. சொன்னால் தப்பாகிவிடும். அதைச் சொல்வதற்கான அதிகாரமும் எங்களிடம் இல்லை . நீட் தேர்வின் தாக்கம் எப்படி இருக்கிறது என ஆய்வு செய்யக் குழு அமைக்கப்பட்ட நிலையில் , ஆய்வு செய்து நீட் தேர்வு பொதுமக்கள் மத்தியில் எந்த அளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற அறிக்கையைக் கொடுத்துவிட்டோம். நீங்கள் மற்ற விவரங்களை அரசிடம்தான் கேட்க வேண்டும், என்று தெரிவித்திருந்தார். கடந்த 12 ஆம் தேதி நீட் தேர்வு நடைபெற்று முடிந்திருக்கும் நிலையில், நீட் தேர்வுக்கு எதிராகச் சட்டமன்ற கூட்டத்தொடரின் கடைசி நாளில் செப்.13 சட்டமுன் வரைவு கொண்டுவரப்பட்டது. இந்நிலையில் தற்பொழுது நீதிபதி ஏ. கே. ராஜன் தலைமையிலான குழு சமர்ப்பித்த நீட் தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் , நீட் தேர்வை ரத்து செய்யத் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். நீட் தேர்வை ரத்து செய்யத் தனியாகச் சட்டம் இயற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறலாம். நீட் தேர்வை ரத்து செய்யத் தனிச் சட்டம் இயற்றுவதன் மூலம் மருத்துவ சேர்க்கையில் சமூக நீதி உறுதி செய்யப்படும். மருத்துவ மாணவர் சேர்க்கையை 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் நடத்திட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## இதுவரை தமிழ்நாட்டில் 4.12 கோடி பேருக்கு தடுப்பூசி

# ஜெ.ராதாகிருஷ்ணன் பேட்டி



சென்னை தேனாம்பேட்டையில் உள்ள டிஎம்எஸ் வளாகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், "தமிழ்நாடு முழுவதும் இன்று நடைபெற்ற மெகா கொரோனா தடுப்பூசி முகாம்களில் இதுவரை 15.35 லட்சம் பேருக்கு தடுப்பூசிப் போடப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதத்தில் இதுவரை 1 கோடி பேருக்கு மேல் கொரோனா தடுப்பூசிப் போடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 19 நாட்களில் ஒரு கோடி கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன இதுவரை தமிழ்நாட்டில் 4.12 கோடி பேருக்கு கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன" எனத் தெரிவித்துள்ளார்.

## உயிரைவிட தேர்வு பெரிதல்ல-நடிகர் சூர்யா உருக்கம்



தமிழ்நாட்டில் நீட் தேர்வு கடந்த சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற நிலையில், தேர்வு அச்சம் காரணமாக இதுவரை 3 பேர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளனர். ஒரு மாணவி தீக்குளித்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். தமிழ்நாடு அரசு தேர்வு தொடர்பான அச்சத்தைப் போக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. தேர்வெழுதிய மாணவர்களின் தொலைப்பேசி எண்களுக்கு தொடர்புகொண்டு மனநல ஆலோசனை வழங்கப்பட்டுவருகிறது. இருந்தும் மாணவர்கள் அதனை முழுவதும் உள்வாங்காத சூழ்நிலை நிலவுகிறது. இந்நிலையில், இந்த உயிரிழப்புகள் தொடர்பாக நடிகர் சூர்யா உருக்கமான வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "எந்த ஒரு கவலையாக இருந்தாலும் சில காலத்துக்குப் பிறகு சரியாகிவிடும். மனதில் கஷ்டம் இருந்தால் பிடித்தவர்களிடம் மனம்விட்டு பேசுங்கள். நம்பிக்கை, தைரியத்துடன் இருந்தால் அனைத்தும் சாத்தியம். ஒரு தேர்வு உங்கள் உயிரைவிட பெரியது இல்லை. தற்கொலை, உங்களை ரொம்ப பிடித்தவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் வாழ்நாள் தண்டனை. மதிப்பெண், தேர்வு மட்டுமே வாழ்க்கை இல்லை. சாதிக்கிறதுக்கு அத்தனை விஷயங்கள் இருக்கு. மாணவர்கள் இந்த தற்கொலை எண்ணத்தில் இருந்து மீள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# அதிமுக முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணிக்கு சொந்தமான இடங்களில் ரெய்டு



அ. தி. மு. க. வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் கே. சி. வீரமணி வீடுகளில் நடந்த சோதனையில் சொகுசு கார்கள், ரொக்க பணம், நகைகள் பறிமுதல் செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத்துறையினர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை 16.09.2021 வெளியிட்டுள்ள அறிக்கையில், "முன்னாள் அமைச்சர் கே. சி. வீரமணிக்குத் தொடர்புடைய 35 இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்த சோதனையில் ரூபாய் 34.01 லட்சம் ரொக்க பணம் ரூபாய் 1.80 லட்சம் வெளிநாட்டுப் பணம், ரோல்ஸ் ராய்ஸ் உட்பட 9 சொகுசு கார்கள், 623 சவரன் தங்க நகைகள் , 47 கிராம் வைர நகைகள், 7.2 கிலோ வெள்ளிப் பொருட்கள், வங்கிக் கணக்கு புத்தகங்கள், சொத்து ஆவணங்கள், ஹார்டு டிஸ்குகள், ஐந்து கணினிகள் உள்ளிட்டவைப் பறிமுதல் செய்யப்பட்டன. கே. சி. வீரமணி வீட்டு வளாகத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்புள்ள 275 யூனிட் மணல் குவித்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது". இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, முன்னாள் அமைச்சர் கே. சி. வீரமணி மீது 2016 2017 ல் வருமானத்திற்கு அதிகமாக சொத்துகளை வாங்கிக் குவித்ததாக அவர் மீது முதல் தகவல் அறிக்கையை லஞ்ச ஒழிப்புத்துறை பதிவு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்தியப் பிரதேசத்தில் இருந்து எம்.பி.யாக எல். முருகன் தேர்வு.



நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் பாஜக சார்பில் தாராபுரம் தொகுயில் போட்டியிட்ட பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் எல். முருகன், சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளரிடம் தோல்வியடைந்தார். இதையடுத்து, பாஜக தலைமை அவரை மத்திய அமைச்சராக்கியது. இதனால் அடுத்த ஆறு மாதத்தில் தேர்தலில் நின்றோ அல்லது மாநிலங்களவை மூலமாகவோ அவர் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற சூழல் ஏற்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் மாநிலங்களவை தேர்தல் நடைபெற இருந்தாலும் அதில் வெற்றிபெறும் அளவுக்குப் பாஜகவுக்குப் பேரவையில் பலம் இல்லை. அதிமுக உதவி கிடைத்தாலும், வெற்றி என்பது பாஜகவுக்கு கிடைக்காது. இந்நிலையில் எல்லா சூழ்நிலைகளையும் உணர்ந்த பாஜக தலைமை, தற்போது அவரை மத்தியப் பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்க உள்ளதாக அறிவித்துள்ளது. அக்டோபர் 4ஆம் தேதி நான்கு மாநிலங்களவை இடங்களுக்கு அங்கு தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், அங்கிருந்து எல். முருகன் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்.

## மோடி பிறந்தநாளை வேலை வாய்ப்பின்மை தினமாக அறிவித்த

## வேளச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா




பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தனது 71 வது பிறந்தநாளை வேளச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா தலைமையில் சத்தியமூர்த்தி பவன் வளாகத்தில் பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை வேலை வாய்ப்பின்மை தினமாக அறிவித்தனர். அதையடுத்து இளைஞர் காங்கிரஸ் சார்பில் 100 அடி நீளம், 50 அடி அகலம் கொண்ட மிகப்பெரிய பேனர் தயாரித்துக் கொண்டாடினார்கள். அப்போது, நரேந்திர மோடி ஒழிக என்று கோஷங்களை எழுப்பினார்கள்.



GoLAAH TRAVELS
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# கடலூர் மாவட்ட செய்திகள்

## பல்லி விழுந்த உணவை உண்ட பள்ளி குழந்தைகள்:வாந்தி, மயக்கம்

### அலட்சியமாக செயல்பபட்ட அங்கன்வாடி பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்–ஆட்சியர்







கடலூர் மாவட்டம் திருச்சோபுரம் ஊராட்சி பூதங்கட்டி கிராமத்தில் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. இங்கு 17 குழந்தைகள் பயின்று வருகின்றனர். இந்த நிலையில் கடந்த நீண்ட நாள் ஊரடங்குக்கு பிறகு தற்பொழுது கடந்த ஒன்றாம் தேதி முதல் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வழக்கம்போல் அங்கன்வாடி மையத்திர்க்கு அங்கு பயிலும் 20 குழந்தைகளும் மதியம் அங்கன்வாடி மையத்திற்கு சென்று மதிய உணவை சாப்பிட்டு உள்ளனர். இதற்கிடையே உணவு சாப்பிட்ட சிறிது நேரத்தில் உணவு உண்ட குழந்தைகள் அடுத்து அடுத்து வாந்தி எடுத்துள்ளனர். இதற்கிடையே உணவு பரிமாறிய ஊழியர்கள் சாப்பாட்டை பார்த்தபோது அதில் பள்ளி விழுந்திருந்தது தெரியவந்தது.இதனால் அதிர்ச்சி அடைந்த அங்கன்வாடி மைய ஊழியர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் 17 குழந்தைகளையும் சிகிச்சைக்காக முதலில் திருச்சோபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்கள் சிகிச்சை செய்வதற்கான வசதிகள் இல்லாததால் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர் பின் அங்கிருந்து குழந்தைகளை அதே ஆம்புலன்ஸ் மூலம் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். அங்கு அவர்களுக்கு மருத்துவர்களால் முதலுதவி அளிக்கப்பட்டு, பின் வாந்தி அதிகமாக வந்த இரண்டு குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த தகவல் அறிந்த குழந்தைகளின் பெற்றோர்கள் அரசு மருத்துவமனையில் குவிந்தனர். பின் அங்கிருந்த குழந்தைகளின் பெற்றோர்களிடம் விசாரிக்கையில் அவர்கள் பூதங்கட்டி கிராமத்தில் செயல்படும் அங்கன்வாடி மையம் சுகாதாரமாக செயல்படவில்லை மற்றும் அங்கு பணி புரியும் ஊழியர்களிடம் இதுகுறித்து கூறினாலும் அவர்கள் அதற்கான நடவடிக்கை எடுக்க தயங்குகிறார்கள், இது மட்டுமின்றி அங்கு தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க விருப்பமில்லை என்றாலும் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் தங்களது பிள்ளைகளை அழைத்து சென்று அங்கு படிக்க வைக்கிறார்கள் என குற்றம் சாட்டினர். இந்த நிலையில் தகவல் அறிந்த கடலூர் மாவட்ட ஆட்சியர் பாலசுப்புரமணியம் சிகிச்சை பெற்று வந்த குழந்தைகளை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி பின்னர் மருத்துவர்களிடம் குழந்தைகளின் உடல்நிலை குறித்து விசாரித்தார் மேலும் அங்கன்வாடி பணியாளர்களிடம் விசாரணை நடத்தினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஆட்சியர் பாலசுப்ரமணியம், இவ்வாறு குழந்தைகள் பாதிக்கும் அளவிற்கு அலட்சியமாக செயல்பபட்ட அங்கன்வாடி பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகள் நலமாக உள்ளனர் இருந்தாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்களது உடல்நிலையை இன்று ஒரு நாள் முழுவதும் பார்த்துவிட்டு பின் நாளை வீடு திரும்புவார்கள் பெற்றோர்கள் அச்சப்பட வேண்டாம் என கேட்டுகொண்டார். இதற்குப்பின் அங்கு வந்த அதிகாரிகள் அங்கன்வாடியில் பணிபுரியும் ஊழியர்களிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தினர். இவ்வாறு ஒரே நேரத்தில் 17 குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் அந்த புகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கடலூர் துறைமுகத்தில் நடைபெற்று வரும் விரிவாக்கத் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர் பாலசுப்ரமணியம் ஆய்வு



கடலூர் துறைமுகத்தில் மத்திய— மாநில அரசுகளின் பங்களிப்புடன், சாகர்மாலா திட்டத்தின் கீழ் ரூ.135 கோடியில் விரிவாக்கப் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணியை மாவட்ட ஆட்சியர் கி.பாலசுப்பிரமணியம் புதன்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது: கடலூர் துறைமுக விரிவாக்கத் திட்டத்தில் இரண்டு தளம், அலைக்கரை, ஆழமிடுதல் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு புதிய சரக்கு கடல் தளங்கள், ஆண்டுக்கு 6.68 மெ.டன் சரக்குகளைக் கையாளும் திறன் கொண்டதாக அமையவுள்ளது. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப்படுவதன் மூலம் தொழிற்சாலைகளின் வளர்ச்சி, சரக்குகளைக் கையாளுதல் திறன் அதிகரிக்கும் என்றார் அவர்.இந்தப் பணிகளை அக்டோபர் மாதத்துக்குள் முழுமையாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். ஆய்வின் போது, செயற்பொறியாளர் தமிழ்நாடு கடல்சார் வாரியம்) ரவிபிரசாத், துறைமுகக் கண்காணிப்பாளார் ஜெபருல்லாகான் கடல்சார் வாரிய அலுவலர்கள், மீன்வளத் துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## காட்டுமன்னார்கோவில் அருகே சாலை விபத்தில் சிக்கிய தம்பதி

## பாதுகாப்பு வாகனம் கொண்டு உதவிய அமைச்சர்






காட்டுமன்னார்கோவில் சகஜானந்தா நகரைச் சேர்ந்தவர் சேகர் (62) அவரது மனைவி சுலோச்சனா(58) ஞாயிற்றுக்கிழமை என்பதால் இருவரும் இருசக்கர வாகனத்தில் காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள நெடுஞ்சேரி தேவாலய வழிபாட்டுக்கு வீராணம் ஏரிக்கரை சாலை வழியாகச் சென்றுகொண்டிருந்தனர்.அப்போது, எதிரே வந்த இருசக்கர வாகனம் இவர்கள் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தை ஏற்படுத்திய வாகனம் அங்கிருந்து சென்றுவிட்டது. இந்த விபத்தில், கணவன், மனைவி இருவரும் பலத்த காயங்களுடன் சாலையில் விழுந்து கிடந்தனர். அப்போது, அந்த வழியாக காரில் சென்ற தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சாலையில் இருவர் காயத்துடன் கிடப்பதைப் பார்த்து தனது வாகனத்தை நிறுத்திக் கீழே இறங்கினார்.வயதான தம்பதியரை மீட்டு அவருடைய பாதுகாப்பு வாகனத்தில் ஏற்றிச் சென்று காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்று அவரது உதவியாளருக்கு உத்தரவிட்டார். இதையடுத்து, காவல்துறையினர் மற்றும் தனி உதவியாளர் ஆகியோர் அந்தத் தம்பதியரை மீட்டு, காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது. இதுகுறித்து, புத்தூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்திவருகின்றனர். அமைச்சரின் இந்தச் செயல் பொதுமக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றுள்ளது.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthalaa@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

## எனக்கு தடுப்பூசி போட்டாச்சு...காதில் வாங்காமல் தடுப்பூசி

# தடுப்பூசி செலுத்திய செவிலியரால் பரபரப்பு





கடலூர் மாவட்டம் பெண்ணாடம் இருளர் தெருவைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்பவருடைய மனைவி லட்சுமி (50) கட்டட தொழிலாளியான இவர் காலை பெண்ணாடத்தில் உள்ள அரசு மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையத்தில் செயல்பட்டுவரும் தடுப்பூசி மையத்தில் தடுப்பூசி போடுவதற்காக சென்றுள்ளார். மருத்துவரிடம் ஆலோசனை பெற்று தடுப்பூசி போடுவதற்காக செவிலியரிடம் சென்று காத்திருந்தார். அப்போது செவிலியர் மற்றொருவரிடம் பேசிக்கொண்டே முதல் தடுப்பூசியை செலுத்தியுள்ளார். பின்னர் மீண்டும் அதே பெண்மணிக்கு செவிலியர் 2 வது முறையாக தடுப்பூசியை செலுத்தும்போது, தனக்கு ஊசி போட்டுவிட்டதாக கூறியும், அதைக் காதில் வாங்காமல் தடுப்பூசியை செலுத்தியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து அவரது மகன் ஐயப்பன் சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் நேரில் சென்று விளக்கம் கேட்டுள்ளார். அதற்கு ஒரு ஊசி மட்டுமே செலுத்தியதாக செவிலியரும், மருத்துவரும் தெரிவித்தனர். ஆனால் ஊசியை செலுத்திக்கொண்ட லட்சுமி, தனக்கு இரண்டுமுறை தடுப்பூசி செலுத்தப்பட்டது என கையில் போடப்பட்ட ஊசியின் தழும்பைக் காட்டி விளக்கினார். அதையடுத்து 2 முறை தடுப்பூசி செலுத்தப்பட்டதாகக் கூறப்படும் லட்சுமிக்கு தலைமை மருத்துவரிடம் ஆலோசனை பெற்று மருத்துவ பரிசோதனைகளை மருத்துவர்கள் மேற்கொண்டுவருகின்றனர். இச்சம்பவத்தால் கரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வந்த சில பயனாளிகள், அச்சத்துடனே தடுப்பூசியை செலுத்திக்கொண்டு திரும்பிச் சென்றனர். அதேசமயம், இதுகுறித்து கூறிய மருத்துவர்கள் 2 முறை தடுப்பூசி போட்டிருந்தாலும் பாதிப்பு எதுவும் ஏற்படாது. ஆனாலும் அவரது உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்து வருவோம் என்றனர். இதனால் பெண்ணாடம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

## பண்ருட்டி அருகே விவசாயியிடம் ரூ.8 ஆயிரம் லஞ்சம் வாங்கிய பெண்

# கிராம நிர்வாக அதிகாரி கைது.!



கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டத்திற்குட்பட்ட நண்டுக்குழி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி அரிகிருஷ்ணன் வயது 38 கடந்த 2019 ஆம் ஆண்டு அரிகிருஷ்ணன் மற்றும் அவருடைய அண்ணன், தம்பிகளுக்குள் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இவருடைய பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்காகக் காட்டுக் கூடலூர் கிராம நிர்வாக அலுவலர் செண்பகவள்ளியிடம் அணுகி உள்ளார். அதற்கு கிராம நிர்வாக அலுவலர் பட்டா மாறுதல் செய்வதற்கு ரூபாய் 10 ஆயிரம் லஞ்சமாக கேட்டுள்ளார். 10,000 தரமுடியாது என்று அரிகிருஷ்ணன் கூறியவுடன் 2000 குறைத்துக் கொண்டு 8,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். இதுகுறித்து அரிகிருஷ்ணன், கடலூரில் லஞ்ச ஒழிப்புத்துறைக்கு புகார் அளித்தார். அவர்களின் ஆலோசனையின் பேரில் லஞ்ச ஒழிப்புத்துறை கொடுத்த ரசாயனம் தடவிய ரூபாய் பணத்தை வி.ஏ.ஓ செண்பகவள்ளியிடம் நேற்று நேரில் வழங்கினார் அப்பொழுது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு காவல் துணை கண்காணிப்பாளர் மெல்வின் ராஜாசிங் ஆய்வாளர்கள் சண்முகம் திருவேங்கடம் உள்ளிட்ட குழுவினர் கையும் களவுமாக பிடித்து கிராம நிர்வாக அலுவலர் செண்பகவள்ளியை கைது செய்து கடலூர் அழைத்து சென்று அவரை சிறையில் அடைத்தனர்.விவசாயி ஒருவரிடம் லஞ்சம் பெற்று, லஞ்ச ஒழிப்புத் துறையிடம் கிராம நிர்வாக அலுவலர் சிக்கிக் கொண்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## கடந்த ஆண்டு பெரியாருக்கு மரியாதை செலுத்திய காவலர்கள் பணியிட மாற்றம்

# இந்த ஆண்டு காவலர்கள் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு.!



விருத்தாசலம் கடந்த ஆண்டு பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய 3 காவலர்கள் பணியி டமாற்றம் செய்யப்பட்டனர். இந்த ஆண்டு பெரியார் பிறந்த தினத்தை சமூக நீதி நாளாக பெரியாருக்கு கடலூர் மாவட்ட காவலர்கள் உறுதிமொழி ஏற்றனர். தந்தை பெரியார் பிறந்த தினத்தை சமூகநீதி நாள் உறுதி யேற்பு நாளாகக் கொண்டாடப்படும் என முதல்வர் கடந்த சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் அறிவித்தார். அதைத்தொடர்ந்து நேற்றுதமிழகம் முழுவதும் அரசு அலு வலகங்களில் சமூகநீதி நாள் உறுதியேற்பு நடைபெற்றது. அதன்படி கடலூர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கண்காணிப்பாளர் சக்திகணேசன் தலைமையில் காவலர்கள் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்றனர். அப்போது சுயமரியாதை ஆளுமைத் திறனும், பகுத்தறிவு கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும் என வாசகங்களோடு அனைத்துக் காவ லர்களும் உறுதிமொழி ஏற்றனர். ஆனால் கடந்த ஆண்டு இதே பெரியார் பிறந்த தினத்தை முன்னிட்டு கடலூர் மாவட்டக் காவல்துறையைச் சேர்ந்த காவலர்கள் 3 பேர் கருப்பு சட்டை அணிந்து, பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவியது. இதையடுத்து 3 காவலர்களும் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். அவர்கள் பணியிட மாற்றத்திற்கு நிர்வாக வசதிக் காக மாற்றப்பட்டதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் விழுப்புரம் மக்களவை உறுப்பினர் டி. ரவிக்குமார் கோரிக்கையின் பேரில் 3 காவலர்களும் மீண்டும் கடலூர் மாவட்டத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். கடந்த ஆண்டு பெரியாருக்கு மரியாதை செய்தவர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்ட நிலையில் அதே காவல்துறை பெரியாருக்கு மரியாதை செலுத்தும் விதமாக சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றது குறிப்பிடத்தக்கது.

## கடலூர் அருகே குப்பை கிடங்கு அமைக்க எதிர்ப்பு

# பேச்சுவார்த்தைக்கு வந்த அதிகாரிகள் முற்றுகை



கடலூர் நகராட்சி மாநகராட்சியாக மாற்றப்படும் என சட்டமன்ற கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மாநகராட்சி விரிவாக்கம் குறித்து ஊராட்சி தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் சென்ற வாரம் நடைபெற்றது. பின் தற்பொழுது அதற்கான முன்னேற்பாடு வேலைகளை நடந்துகொண்டிருக்கிறது. அதன்படி கடலூர் அடுத்த வெள்ளப்பாக்கம் பகுதியில் விதை நெல் பண்ணைக்கு சொந்தமான இடம் வருவாய் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு அந்த பகுதியில் குப்பை கிடங்கு அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.கடலூர் நகராட்சிக்கு அருகில் உள்ள வெள்ளப்பாக்கம் ஊராட்சி கடலூர் மாநகராட்சியுடன் இணைப்பதற்கான முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, அந்த ஊராட்சியில் உள்ள சுமார் 90 ஏக்கர் அரசு நிலத்தில் நகராட்சியின் குப்பை கிடங்கு அமைக்க நகராட்சி நிர்வாகம் முன்வந்துள்ளது இதற்கான இடத்தையும் பார்வையிட்டு முடிவு செய்துள்ளனர். அதனை அறிந்த வெள்ளப்பாக்கம் கிராம மக்கள் தங்கள் பகுதியில் குப்பை கிடங்கு அமைந்தால் பல்வேறு நோய் தொற்று ஏற்படும் இங்கு குப்பைகளை தீயிட்டு கொளித்தினால் குழந்தைகளுக்கு பாதிப்பு ஏற்படும் மழைகாலங்களில் துர்நாற்றம் வீசும் மற்றும் குப்பைகள் இங்கேயே தேக்கி வைக்கப்பட்டால் எங்களின் நிலத்தடி நீர்வளம் கெட்டுவிடும் எனவே தங்கள் கிராமத்தில் குப்பை கிடங்கு அமைக்க கூடாது என கூறி கிராம மக்கள் இன்று குப்பை கிடங்கு அமையவுள்ள இடத்தில் 300 க்கும் மேற்பபட்டோர் தரையில் அமர்நது தர்ணா போராட்டத்தில் ஈடுப்பட்டனர். தகவல் அறிந்த அந்த பகுதி காவல்தறையினர் குவிக்கப்பட்டனர். பின் போராட்டத்தில் ஈடுப்பட்ட மக்களிடம் கடலூர் வட்டாட்சியர் பலராமன் அவர்கள் பேச்சுவார்தை நடத்தினார் அப்போது பேச்சுவார்தை நடத்திய அதிகாரிகளை முற்றுகையிட்டு வாக்கு வாதத்தில் ஈடுபட்டு குப்பை கிடங்கு அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதுகுறித்து கிராம மக்கள் கூறுகையில், ஏற்கனவே அரசு விதைப்பண்ணையாக செயல்பட்டு வந்த 90 ஏக்கர் இடம் தற்போது விவசாயம் செய்யாமல் உள்ளது. ஆனால், ஆனால் அது அரசாங்க நிலம் என்பதாலும் அதில் விதைப்பண்ணை இருப்பதாலும் நாங்கள் அதனை எதிர்க்கவில்லை, ஆனால் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், நகராட்சியின் குப்பை கிடங்கினை இங்கு அமைத்தால் விவசாயம் மற்றும் கிராமத்தின் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும். நாங்கள் எங்களின் ஊருக்கு என வேலை வாய்ப்பினை உருவாக்கினாலோ அல்லது எங்களது பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடம் கட்டி தந்தாலோ நாங்கள் அதனை எதிர்க்க மாட்டோம் ஆனால் இங்கு. குப்பை கிடங்கு திட்டத்தை செயல்படுத்த கூடாது என்றனர். பின் கடலூர் வட்டாட்சியர் அவர்கள் எவ்வளவு கூறியும் மக்கள் அந்த இடத்தை விட்டு நகரவில்லை பின், கடலூர் கோட்டாட்சியர் அவர்கள் வந்து குப்பை கிடங்கு வராமல் இருக்க ஆவண செய்யப்படும் என நம்பிக்கை குடுத்த பின் தான் மக்கள் அங்கிருந்து களைந்து சென்றனர்.

# கடலூர்:போதிய பஸ் வசதி இல்லாமல் அவதியுறும் பள்ளி மாணவர்கள்



கடலூரில் போதிய பேருந்து வசதி இல்லாமல் மாணவ, மாணவிகள் அவதிப்படுகின்றனர் . தற்போது ஒரே நேரத்தில் பள்ளிகள் விடுவதால் மாணவர்களால் பேருந்து நிலையம் நிரம்பி வழிகிறது. தமிழகத்தில் கடந்த 1 ஆம் தேதி முதல் 9,10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் திறக்கப்படும் போது மாணவர்கள் ஒரே நேரத்தில் கூட்டமாக செல்லாமல் தனித்தனியாக செல்ல ஏற்பாடுகள் செய்யப்படும் என அரசு அறிவித்தது.ஆனால் , அறிவித்தபடி சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அனைத்து பள்ளிகளும் ஒரே நேரத்தில் விடுவதால் கடலூர் பேருந்து நிலையத்தில் மாணவர்கள் பேருந்துக்காக ஒரே நேரத்தில் குவிந்து விடுகிறார்கள். இதனால் பேருந்து நிலையமே மாணவர்களால் நிரம்பி வழிகிறது . பேருந்துகளை கண்டவுடன் மாணவர்கள் ஓடி ஓடி ஏற முயற்சிப்பது அங்கிருப்பவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகிறது. எனவே, காலை, மாலை வேளைகளில் மாணவ—மாணவிகள் பள்ளிக்கு சென் வர கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டும் என்பது பெற்றோர்களின் கோரிக்கையாக உள்ளது.

அகர முதல
தொடர்புக்கு
9597887847
8870884969
Aagaramuthalaa
aagaramuthalaa@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

GoLAAH TRAVELS
முன்பதிவிற்கு
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?.
இப்போது 50-க்கும் மேற்பட்ட
கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும்
கார் வாடகைக்கு
மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
Aagaramuthalaa | aagaramuthalaadigitals@gmail.com | தொடர்புக்கு 9597887847 / 8870884969

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969



# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## மயிலாடுதுறையில் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை உருவாக்க திட்டம்

# சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார் தகவல்



மயிலாடுதுறையில் ரூ.50 கோடி மதிப்பில் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று எம்எல்ஏ ராஜகுமார் கூறினார். மயிலாடுதுறை அரசு ஆஸ் பத்திரியில் நகரம் மட்டுமின்றி சுற்றுப்புற கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பொது மக்கள் தினந்தோறும் சிகிச்சை பெற்று செல் கின்றனர். கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கொரோனா 2 வது அலையின் போது ஆக்சிஜன் தட்டுப்பாடு ஏற்பட்டதால் காற்றில் இருந்து ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் கருவி ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது. மேலும் மாவட்ட தலைநகருகே உண்டான 16 கூறுகளுடன் கூடிய புதிய சிடி ஸ்கேன் இயந்திரம் பொறுத்தும் பணி நடந்தது வருகிறது. இன்னும் ஓரிரு தினங்களில் பணி நிறைவடைந்து சிடி ஸ்கேன் செயல்படும், இப்பணிகளை மயிலாடுதுறை எம்.எல்.ஏ.ராஜகுமார் ஆய்வு செய்தார். அப்போது தேசிய நகர் புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் நோயாளிகளின் உதவியாளர்கள் தங்குவதற்காக ரூ.72 லட்சத்தில் 50 ஆண்கள் மற்றும் 50 பெண்கள் தங்கும் ஓய்வறை கட்டுவது குறித்தும், ஆஸ்பத்திரியில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகள் அகற்றுவது குறித்தும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் நிருபர்களிடம் கூறுகையில், மத்திய அரசின் நகாய் திட்டத்தின் கீழ் காற்றில் இருந்து ஆக்சிஜன் தயாரிக்கும் கருவி ஒரு கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடந்து வருகிறது. இந்த கருவி செயல்படத் தொடங்கினால் ஒரு நிமிடத்திற்கு ஆயிரம் லிட்டர் ஆக்சிஜன் உற்பத்தி கிடைக்கும். அதனால் 300 நோயாளிகளுக்கு ஆக்சிஜன் நேரடியாக வழங்கப்படும். தமிழக அரசு ரூ.50 கோடியில் அமைய இருக்கும் இந்த திட்டத்திற்கான இடம் தேர்வு நடைபெற்றது என்றார். ஆய்வின் போது மருத்துவர் ராஜசேகர், மருத்துவர் வீர சோழன், திமுக நகர செயாலாளர் செல்வராஜ், ஒன்றிய கவுன்சிலர் பாண்டியன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக ரூ.6 கோடி மதிப்பிலான கடனுதவி

# மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா வழங்கினார்




மயிலாடுதுறையில் மாவட்ட முன்னோடி வங்கி அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா திறந்து வைத்து, மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக ரூ.6 கோடி மதிப்பிலான கடனுதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். மயிலாடுதுறையில் மாவட்ட முன்னோடி வங்கி அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா திறந்து வைத்து, மயிலாடுதுறை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக ரூ.6கோடி மதிப்பிலான கடனுதவிகளை 50 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது... இன்றையதினம்மயிலாடுதுறையில் மாவட்ட முன்னோடி வங்கி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டமானது தமிழகத்தில் 38 வது மாவட்டமாக உருவாகிய மாவட்டமாகும், அரசுக்கும் மக்களுக்கும் பொருளாதார ரீதியில் பாலமாக இம்மாவட்டத்தில் முன்னோடி வங்கி செயல்பட வேண்டும். பாரத பிரதமரின் ஆத்ம நிர்பார் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் சாலையோர வியாபாரிகள் கடன் திட்டம் வழங்கியதில் தமிழகத்திலேயே மயிலாடுதுறை மாவட்டம் முதன்மை மாவட்டமாக திகழ்ந்துள்ளது. மேலும் அரசின் ஏனைய கடனுதவி திட்டங்களை முன்னோடியாக சிறப்பான முறையில் செயல்படுத்த வங்கியாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகில் உள்ள 5 வது புதுத் தெருவில் அமைந்துள்ள மாவட்ட முன்னோடி வங்கியின் சேவைகளை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தெரிவித்தார். இதனைத்தொடர்ந்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலமாக மகளிர் குழுக்கடன், சுயதொழில் தொடங்க மானியத்துடன்கூடிய கடன், விவசாய கடன், நடவு இயந்திரம்) என மொத்தம் ரூ.6 கோடி மதிப்பிலான கடனுதவிகளை மாவட்ட இரா.லலிதா 50 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு ஆட்சியர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் சுரேஷ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முத்துசாமி, நபார்டு வங்கி துணை பொதுமேலாளர் பிரபாகரன், மகளிர் திட்ட அலுவலர் கவிதாபிரியா, மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் கமலக்கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் அண்ணாவின் 113 வது பிறந்த நாள் விழா

# திமுக,அதிமுக, நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை



மயிலாடுதுறை மாவட்டத்தில் அண்ணாவின் 113 வது பிறந்த நாள் விழா திராவிட முன்னேற்றக் கழக பொறுப்பாளர்கள் தொண்டர்கள் இனிப்புகள் வழங்கி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். மயிலாடுதுறை மாவட்டத்தில் பேறறிஞர் அண்ணா 113 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பேறறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம் முருகன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதேபோல் செம்பனார்கோவில் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பேறறிஞர் அண்ணா திருவுருவ சிலைக்கு பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் திரளான திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் பங்கேற்று இனிப்புகள் வழங்கி பேறறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை கொண்டாடினர்.



மயிலாடுதுறை மாவட்டத்தில் பேறறிஞர் அண்ணா 113வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மயிலாடுதுறை பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பேறறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மயிலாடுதுறை மாவட்ட அதிமுக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான எஸ் பவுன்ராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.அதேபோல் செம்பனார்கோவில் பேருந்து நிலையம் அருகில் அமைக்கப்பட்டிருந்த பேறறிஞர் அண்ணா திருவுருவ படத்திற்கு செம்பை வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் ஜனார்த்தனன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதேபோன்று தரங்கம்பாடி தாலுக்கா சங்கரன்பந்தல் பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த பேறறிஞர் அண்ணா திருவுருவப்படத்திற்கு செம்பை தெற்கு ஒன்றிய அதிமுக செயலாளர் கண்ணன் மாலை அணிவித்தார். வழங்கி நிகழ்ச்சியில் திரளான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் பங்கேற்று இனிப்புகள் வழங்கி பேறறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை கொண்டாடினர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில்

## கூடுதல் எடை வைத்து நெல் கொள்முதல் செய்தால் கடும் நடவடிக்கை

# ஆட்சியர் இரா.லலிதா அறிவிப்பு



மயிலாடுதுறை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கூடுதல் எடை வைத்து கொள்முதல் செய்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் ஆட்சியர் இரா.லலிதா. இது குறித்து, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு, மயிலாடுதுறை, குத்தாலம், தரங்கம்பாடி, சீர்காழி ஆகிய வட்டங்களில் நடப்பு காரீப் மார்க்கெட்டிங் பருவத்துக்கான (2020 2021) குறுவை நெல் அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன. நெல் அறுவடையாகும் பகுதிகளை கண்டறிந்து இதுவரை 110 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் பணி நடைபெற்று வருகின்றன. அதேநேரத்தில் விவசாயிகள் கொண்டுவரும் நெல்லை மூட்டைக்கு 42 கிலோ என்று எடை வைத்து கொள்முதல் பணியாளர்கள் கொள்முதல் செய்வதாக புகார்கள் விவசாயிகளிடமிருந்து வருகின்றன. கொள்முதல் பணியாளர் கள் விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூட்டை ஒன்றுக்கு 40.580 கிலோ கிராம் (அதாவது நெல் 40 கிலோ சாக்கு, 0.580 கிராம்) என்ற அளவில் கொள்முதல் செய்யவேண்டும். தவறினால் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கைப்படுகிறது. விவசாயிகள் கொண்டுவரும் நெல் மூட்டை ஒன்றுக்கு 40.580 கிலோகிராம் எடை வைத்து 17 சதவீத ஈரப்பதத்துக்குள் இருக்க வேண்டும். கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட சிட்டா, அடங்கல் மற்றும் உதவி வேளாண்மை அலுவலரிடம் பெற்றுள்ள சான்று ஆகியவற்றை ஆய்வு செய்து நெல் கொள்முதல் செய்யப்படும். நெல் கொள்முதல் தொடர் பான புகார்களை துணை மேலாளர், மயிலாடுதுறை தொலைபேசி எண்9843075023,9443940864 மற்றும் மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை அலுவலக கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்9842672817 ஆகியவற்றில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறையில் உலக ஓசோன் தின விழா




மயிலாடுதுறையில் தேசிய பசுமைப் படையின் சார்பில் உலக ஓசோன் தின விழா மயிலாடுதுறை மிட்டவுன் ரோட்டரி சங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்டது இவ்விழாவில் ஓசோன் தின விழிப்புணர்வு குறித்த பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் இரா லலிதா தேசிய பசுமை படை எண் பள்ளி ஒருங்கிணைப்பாளர் களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கினார் நிகழ்வில் ரோட்டரி சங்கத்தின் பொருளாளர் வேல்சந்த் கலந்து கொண்டார் பசுமை படை யின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் இரா செல்வகுமார் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார் .இந்நிகழ்ச்சியில் பல்வேறு பள்ளிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

விளம்பர தொடர்புக்கு
9597887847

## மயிலாடுதுறையில் முதியவரை வீட்டுக்குள் வைத்து

# பூட்டி 'சீல்' வைத்த நிதி நிறுவனத்தினர்






மயிலாடுதுறை காந்தி நகரில் உள்ள ஒரு வீட்டில் 66 வயதான புருஷோத்தமன் என்பவர் தனியாக 3 லட்சம் ரூபாய்க்கு வீட்டை குத்தகைக்கு எடுத்து கடந்த 7 ஆண்டுகளாக குடி இருந்து வருகிறார். இந்நிலையில் அந்த வீட்டின் உரிமையாளர் தனியார் நிதி நிறுவனத்தில் வீட்டின் மீது கடன் வாங்கியுள்ளார். உரிய காலத்தில் கடனை திருப்பி கட்டாததால் நிதி நிறுவனத்தினர் நீதிமன்றம் மூலம் அந்த வீட்டை ஜப்தி செய்வதற்கு அனுமதி பெற்றுள்ளனர். இந்த சூழலில் கால அவகாசம் முடிவடைந்ததை அடுத்து, கடனை திரும்பச் செலுத்தமுடியாத வீட்டின் உரிமையாளர், நிதி நிறுவனத்தினிடம் எனது வீட்டை ஜப்தி செய்துகொள்ளுங்கள் என தெரிவித்துவிட்டு சென்ற அவர், முதல் மாடியில் குத்தகைக்கு ஒருவர் குடியிருப்பதையும் அவருக்கு பணம் தரப்படவேண்டும் என்ற தகவலையும் வீட்டை ஜப்தி செய்ய வந்த நிதி நிறுவன ஊழியர்களிடம் சொல்லவில்லை. இதையடுத்து, சம்பந்தப்பட்ட வீட்டுக்குச் சென்ற நிதி நிறுவனத்தினர். முதல் தளத்தில் இதய அறுவை சிகிச்சை செய்துள்ள புருஷோத்தமன் தூங்கிகொண்டிருந்ததை அறியாமல் வீட்டை பூட்டி சீல் வைத்து சென்றனர். இந்நிலையில் வீட்டுக்கு வந்த அவரது மகன் சதீஷ் தனது தந்தை மாடியில் உள்ள நிலையில் வீட்டை சீல் வைத்துவிட்டனர் என்று கூறியுள்ளார். இதையடுத்து தகவல் அறிந்து அங்கு மயிலாடுதுறை காவல்நிலைய ஆய்வாளர் செல்வம் தலைமையில் போலீசார் சென்று பார்த்தபோது, மாடியில் புருஷோத்தமன் இருந்தது தெரியவந்தது. உடனடியாக அவருக்கு உணவு வழங்கப்பட்டது. நிதி நிறுவனத்தினரிடம் கேட்டதற்கு இது நீதிமன்ற நடவடிக்கை என்றும் மாடியில் ஆள் இருந்தது தெரியாது என்றனர். உடனடியாக அவரை மீட்கவேண்டும் என்று போலீசார் கேட்டதும், நாகை நீதிமன்றத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கிருந்து அதிகாரிகள் மற்றும் நிதி நிறுவனத்தினர் மயிலாடுதுறை சென்று மாடி பகுதிக்குச் செல்லும் கேட்டின் சீலை நீக்கி முதியவரை மாடியிலிருந்து அழைத்தனர், அப்போது என் பணம் 3 லட்சம் ரூபாய் என்னவானது என்று அவர் புலம்ப அவரை கைத்தாங்கலாக அழைத்துகொண்டு வெளியே வந்தனர். தொடர்ந்து அனைவரையும் மயிலாடுதுறை போலீசார் காவல்நிலையம் அழைத்துச்சென்று விசாரித்தனர். தனியார் நிதி நிறுவனத்தினர் கூறுகையில், இந்த வீடு ஜப்தி செய்து ஏலம் முடிந்ததும் புருஷோத்தமன் தொகை கிடைக்க வழிவகை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்துச்சென்றனர். முதியவரை வீட்டிக்குள் வைத்து பூட்டி நிதி நிறுவனத்தினர் சீல் வைத்து சென்ற சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## பெரம்பூர் டாஸ்மாக் கடையில் சிசிடிவியை உடைத்து சுவற்றில் துளையிட்டு கொள்ளை முயற்சி.!



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுக்கா பெரம்பூரில் டாஸ்மாக் மதுபானக்கடை உள்ளது. கிராமத்தின ஒதுக்குப்புறமாக உள்ள இந்த கடையை மேற்பார்வையாளர் அசோக், விற்பனையாளர் ரகுராமன் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு வழக்கம்போல் பூட்டிச்சென்றுள்ளனர். திங்கள்கிழமை காலை கடையை திறப்பதற்காக வந்தபோது கடையின் ஷட்டர் பூட்டு அறுக்கப்பட்டு கிடந்தது. மேலும், பதட்டமடைந்த மேற்பார்வையாளர் மற்றும் விற்பனையாளர் கடையின் பின்புறம் சென்று பார்த்தபோது பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பின்புறம் ஒரு ஆள் நுழையும் அளவுக்கு சுவர் துளையிடப்பட்டிருந்ததும், சிசிடிவி உடைக்கப்பட்டிருந்ததும், கடையின் மேலும் சில பூட்டுக்களை திறக்க முடியாததால் சுவற்றில் துளையிட்டு உள்ளே நுழைந்ததும் தெரியவந்தது. இதையடுத்து, பெரம்பூர் காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவலறிந்து வந்த பெரம்பூர் காவல் ஆய்வாளர் சிவதாஸ் தலைமையிலான காவலர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். மேலும், மயிலாடுதுறை துணை காவல் கண்காணிப்பாளர் வசந்தராஜா சம்பவ இடத்துக்கு வந்து, கொள்ளை முயற்சி குறித்து, கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்பநாயை வரவழைக்க உத்தரவிட்டார். இக்கடையில் ஏற்கெனவே ஒரு முறை கொள்ளை நடந்துள்ளதால், கடையில் வசூலாகும் பணத்தை பத்திரப்படுத்த லாக்கர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொள்ளை முயற்சியில் லாக்கரை உடைக்க முயற்சித்து முடியாததால், சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் வசூலான மூன்றரை லட்சம் ரூபாய் தப்பியது. மேலும் கடையில் வைத்திருந்த மதுபாட்டில்கள் அடங்கிய அட்டைப்பெட்டிகளை எடுத்துக் கொண்டு கொள்ளையர்கள் ஓட்டம் பிடித்துள்ளனர். இதுகுறித்து, கடையின் சிசிடிவியின் டிவிஆர் பதிவுகளின் அடிப்படையில் பெரம்பூர் காவல் துறையினர் கொள்ளையர்களை தேடிவருகின்றனர்.

## விற்பனை கூடங்களை பயன் படுத்தி கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு..!



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார் கோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் இன்று நடைபெற்ற பருத்தி மறைமுக ஏலத்தில் அதிகபட்ச விலை குவிண்டால் ஒன்றுக்கு 7.769 க்கும் சராசரி 70.40க்கும் விலை போனது மொத்தம் 374 விவசாயிகள் 12 வியபாரிகள் 498 குவிந்தார்கள் 950 மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டது. மேலும் நாகை விற்பனை குழு செயலாளர் மற்றும் தனி அலுவலர் கூறியதாவது இது போல் விவசாயிகள் தங்களின் விளை பொருட்களான நெல், பயறு, உளுந்து , நிலகடலை, முந்திரி, துவரை, தேங்காய், மிளகாய், கரும்பு வெல்லம் போன்ற விளை பொருட்கட்களை எடுத்து வந்து பயன் அடைய வேண்டும். மேலும் விளை பொருட்களை நாகை விற்பனை குழு கீழ் இயங்கும் குத்தாலம், மயிலாடுதுறை, செம்பனார்கோவில் , சீர்காழி, வேதாரண்யம், கீழ்வேளூர் , திருபூண்டி, மற்றும் நாகப்பட்டினம் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் உள்ள கிடங்குகளில் இருப்பு வைத்து பொருளீட்டு கடன் பெற்று அதிக விலை கிடைக்கும் நேரங்களில் விற்று பயன் அடைய வேண்டி விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

## தரங்கம்பாடி — குட்டியாண்டியூரில் கடல் அரிப்பு பூம்புகார் எம்எல்ஏ நிவேதா முருகன் பார்வையிட்டார்



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி எடுத்து குட்டி ஆண்டு வரையில் கடலரிப்பு ஏற்பட்டு கடல் உள் புகும் அபாயம் உள்ளதால் கடலோர மீனவ கிராமங்களான தரங்கம்பாடி குட்டியாண்டியூர், சின்ன மாணிக்கபங்கு உள்ளிட்ட மீனவர் கிராமங்களை பஞ்சாயத்தார்கள் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகனிடம் கோரிக்கை மனு அளித்து நேரில் வந்து பார்வையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அதன் பேரில் கடற்கரையோரங்களில் பாதிப்பை எம்எல்ஏ நேரில் சென்று பார்வையிட்டார்.மேலும் இந்த பாதிப்பின் குறித்து அதிகாரிகளிடம் எடுத்துரைத்த பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா என் முருகன் மீனவ பஞ்சாயத்தார்கள் அளித்த மனுவில் வைத்த கோரிக்கைகளை கூடிய விரைவில் வேலைக்கும் சரிசெய்து தருவதாக கூறினார்.மேலும் இதில் செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் அப்துல்மாலிக், செம்பை ஒன்றிய துணை பெருந்தலைவர் மைனர், தொழில் அதிபரும் திமுக பிரமுகருமான சந்துரு, மயிலாடுதுறை மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் தரங்கம்பாடி குட்டியாண்டியூர் மீனவ கிராம முக்கியஸ்தர்கள் உடனிருந்தனர்.

## வைத்தீஸ்வரன்கோவில்:100 க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைந்தனர்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி 100 —க்கும் மேற்பட்டோர் அதிமுக பாஜக உள்ளிட்ட மாற்று கட்சியில் இருந்து விலகி மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் மகா அலெக்ஸாண்டர், பேரூர் கழக செயலாளர் அன்புச் செழியன் தலைமையில் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் முன்னிலையில் பொறையாரில் உள்ள அவரது இல்லத்தில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் அப்துல் மாலிக் தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி அமைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

## பெங்களூரு அருகே கன்டெய்னர் லாரி மீது மயிலாடுதுறை ரயில் மோதி விபத்து. !



மைசூருவில் இருந்து பெங்களூரு வழியாக மயிலாடுதுறைக்கு பயணிகள் ரயில் தினந்தோறும் இயக்கப்படுகிறது. நேற்று இரவு மைசூருவில் இருந்து பெங்களூரு வழியாக மயிலாடுதுறை நோக்கி சென்று கொண்டிருந்தது. ஆனேக்கல் தாலுகா ஆவலஹள்ளி அருகே உள்ள ரயில் தண்டவாளத்தை கன்டெய்னர் லாரி கடக்க முயன்றது. அப்போது, லாரியின் சக்கரம் தண்டவாளத்தில் சிக்கி கொண்டது. அப்போது, அந்த வழியாக மயிலாடுதுறை பயணிகள் ரயில் வந்தது. இதை பார்த்த டிரைவர் உயிர் பிழைத்தால் போதும் என்று இறங்கி தப்பி ஓடினார். வேகமாக வந்த ரயில் கன்டெய்னர் லாரி மீது பயங்கரமாக மோதியது. இதில், லாரி அப்பளம் போல் நொறுங்கியது. அங்கிருந்த மின்கம்பமும் சேதமடைந்தது. ரயில் சக்கரத்தில் லாரி சிக்கியதால், மேற்கொண்டு ரயில் செல்லமுடியாமல் அந்த இடத்திலேயே நின்றது. விபத்து காரணமாக அவ்வழியாக செல்லும் ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டுள்ளது. இந்த விபத்தில் உயிரிழப்பு ஏற்படவில்லை.

## பெரம்பூர் டாஸ்மாக் கடையில் துளையிட்டு கொள்ளை முயற்சி மூன்றரை லட்சம் ரூபாய் தப்பியது.



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுக்கா பெரம்பூரில் டாஸ்மாக் மதுபானக்கடை உள்ளது. கிராமத்தின ஒதுக்குப்புறமாக உள்ள இந்த கடையை மேற்பார்வையாளர் அசோக், விற்பனையாளர் ரகுராமன் ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு வழக்கம்போல் பூட்டிச்சென்றுள்ளனர். திங்கள்கிழமை காலை கடையை திறப்பதற்காக வந்தபோது கடையின் ஷட்டர் பூட்டு அறுக்கப்பட்டு கிடந்தது. மேலும், பதட்டமடைந்த மேற்பார்வையாளர் மற்றும் விற்பனையாளர் கடையின் பின்புறம் சென்று பார்த்தபோது பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பின்புறம் ஒரு ஆள் நுழையும் அளவுக்கு சுவர் துளையிடப்பட்டிருந்ததும், சிசிடிவி உடைக்கப்பட்டிருந்ததும், கடையின் மேலும் சில பூட்டுக்களை திறக்க முடியாததால் சுவற்றில் துளையிட்டு உள்ளே நுழைந்ததும் தெரியவந்தது. இதையடுத்து, பெரம்பூர் காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். தகவலறிந்து வந்த பெரம்பூர் காவல் ஆய்வாளர் சிவதாஸ் தலைமையிலான காவலர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர் . மேலும், மயிலாடுதுறை துணை காவல் கண்காணிப்பாளர் வசந்தராஜா சம்பவ இடத்துக்கு வந்து, கொள்ளை முயற்சி குறித்து , கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்பநாயை வரவழைக்க உத்தரவிட்டார். இக்கடையில் ஏற்கெனவே ஒரு முறை கொள்ளை நடந்துள்ளதால், கடையில் வசூலாகும் பணத்தை பத்திரப்படுத்த லாக்கர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொள்ளை முயற்சியில் லாக்கரை உடைக்க முயற்சித்து முடியாததால், சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் வசூலான மூன்றரை லட்சம் ரூபாய் தப்பியது. மேலும் கடையில் வைத்திருந்த மதுபாட்டில்கள் அடங்கிய அட்டைப்பெட்டிகளை எடுத்துக் கொண்டு கொள்ளையர்கள் ஓட்டம் பிடித்துள்ளனர். இதுகுறித்து, கடையின் சிசிடிவியின் டிவிஆர் பதிவுகளின் அடிப்படையில் பெரம்பூர் காவல் துறையினர் கொள்ளையர்களை தேடிவருகின்றனர்.

அகர முதல
தொடர்புக்கு 9597887847 8870884969
Aagaramuthalaa
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு

வாடகைக்கு கடை தேவை: 8610255229